மில்க்வைற் செய்தி

Milk White News

தபாற்பெட்டி இல. 77 யாழ்ப்பாணம். தொலைபேசி: 7233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ கார்த்திகை 1978 ★ இதழ் - 35


# மரம் நாட்டுதலும் பனையபிவிருத்தியும்




வடபிரதேசமெங்குமுள்ள ஊர்கள் தோறும் பல சிறு குளங்கள் வற்றி வரண்டு கிடந்தபோது இளைஞர் பலர் மில்க் வைற் தொழிலதிபரின் வேண்டுகோளையும் உபகரிப்பையும் ஏற்றுச் சிரமதானப்பணிமூலம் குளங்களை ஆழமாக்கினார்கள்.

சென்ற வாரந் தொடக்கம் பெய்து வருகின்ற நல்ல மழை காரணமாக குளங்கள் தோறும் நீர் நிறைந்து வருகின்றது. ஏரி நிறைந்துள்ள போது அங்கே ஒருஇறைமைக் காட்சி உண்டென்பர். நீர் இறைவனின் இன்னருள்.

வழக்கம்போல இவ்வாண்டும் பனையபிவிருத்தியின் பொருட்டு மில்க்வைற் வாகனங்கள் கிளிநொச்சி, பரந்தன், வவுனிக்குளம், மல்லாவி, துணுக்காய், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு முதலாய இடங்களை நோக்கி விரைந்தன.

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்)



யாழ். இந்துக்கல்லூரியில் சாரணியம் என்னும் நூலை தொழிலதிபர் வெளியிடுதல்.

★ இருதய சுத்தம் எல்லோரையும் வாழ்விக்கும் ★

உ
சிவமயம்






## திருநாவுக்கரசு நாயனுர்

திருவின்னம்பர் — திருநேரிசை
திருச்சிற்றம்பலம்

**விண்ணவர் மகுடகோடி மிடைந்தசே வடியர்போலும்**
**பெண்ணெரு பாகர்போலும் பேடலி யாணர்போலும்**
**வண்ணமா லயனுங்காணு மால்வரை பெரியர்போலும்**
**எண்ணுரு வநேகர்போலு மின்னம்ப ரீசனரே,**

திருச்சிற்றம்பலம்

கோடிக்கணக்கான தேவர்களின் முடிகள் வந்து கலந்த திருவடியினர், உமாதேவியாரைப் பாகத்திலே கொண்டவர், பெண், அலி, ஆண் ஆகிய தன்மையினர், கார் வண்ண அழகிற் சிறந்தவர், திருமாலும் நான்முகனும் காணமுடியாத பேரொளியான தீவண்ணர், எண்ணப்படும்போது அளவில்லாத திருவுருவமுள்ளவர், திருவின்னம்பர் என்னும் திருத்தலத்திலே எழுந்தருளியுள்ள எம்மை உடையவர்.

### திருவின்னம்பர் ஈசர்

வேதமுதல்வர், பாம்பினை அரையிலணிந்தவர், நெருங்கிய சடையினர், சந்திரனையும் மத்த மலரையும் அணிந்தவர், மழுப்படையுடையவர், மாதினைப் பாகங்கொண்டவர், எம்மையும் அடிமையாகக் கொண்டவர், திருக்கரத்திலே மானைத் தாங்கியவர், மயிரைப் பிடுங்கி எறியும் சமணசமயத்திலிருந்து எம்மைச் சூலைநோய் தந்து காத்தருளியவர், தலைமாலைகளை அணிந்தருளியவர், ஆலகாலவிடந்தங்கிய கண்டத்தினர், தகாதவர் செய்த வேள்வியைத் தகர்த்தவர், இயமனை உதைத்தருளியவர், அழகிய எருதினில் ஏறிவருபவர், ஐந்தலை நாகத்தினைப் பூண்டவர், புலித்தோலை உடுத்தவர், துன்பங்களை நீக்கி இன்பந் தந்தருள்பவர், கொன்றை யணிந்தவர், மன்மதனை விழித்து எரித்தருள் செய்தவர், அண்டபகிரண்டமெங்கும் நிறைந்தவர், திருநீறு தரிப்பவர், அடியவர்களுக்கு எளிதில் அருள் பாலிப்பவர், மேரு மலையை வில்லாகவும் திருமாலை அம்பாகவும் கொண்டவர், கயாசுரனை உதைத்துக் கொன்று தோலைப் போர்த்தவர், மலையினர், அடியவர்களுக்கு இனியவர், மலைபோலும் தோளினர், கங்கையைத்தரித்த சடையினர், ஆமை மருப்புத் தாங்கும் மார்பினர், பூணூல் தரித்தவர், மகா சங்கார காரணர், சுடுகாட்டில் ஆடுபவர், உலகத்தை அழிக்கும்போது ஒலியுண்டாக்குபவர், அருச்சுனனோடு போர் செய்த வேட்டுவ வடிவந் தாங்கியவர், எருக்கு, வன்னி, தும்பை, கொக்கிற்கு மலர் இதழ்கள் சூடிய சென்னியர், எட்டுத் தோள்களை உள்ளவர், நினைப்பினுக்கு அரியர், பிரம கபாலத்தில் பலியேற்றுண்பவர், இடபக் கொடியினை உயர்த்தியவர், இராவணனை விரலால் ஊன்றி அடக்கியவர், தம்மைத் துதிப்பவர்களை ஏழுலகிலும் வாழ வைத்தவர் திருவின்னம்பர் ஈசனுராவர். ★




## நாடு

நாட்டின் அமைப்பு

**தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்**
**செல்வரும் சேர்வது நாடு.**

தவறுத விளைநிலங்களும், தகுதி வாய்ந்த பெரியவர்களும், குறைவில்லாத செல்வமுள்ளவர்களும் ஒருங்குசேரப் பெற்றதே நாடு என்பதாகும்.

### The Country

Unfailing produce, people who follow the right path, and they whose wealth never falls low - constitute the country.

எவ்வழி ஆடவர் நல்லவர் அவ்வழி வாழிய நிலனே என்றும், நாரியர் உயர்ந்தால் நாடு உயரும் என்றும் பெரியோர் கூறுவர். தார்மீக சமுதாயம் என்றும், ராம ராச்சியம் என்றும், செங்கோன்மை என்றும் கூறியயாவும் நல்ல நாட்டைக் குறிப்பனவாகும். ★

## 1978 நவம்பர் மாத நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 1 | புதன் | — | கந்தசஷ்டி விரதாரம்பம் |
| 6 | திங்கள் | — | சஷ்டி நாள் |
| 10 | வெள்ளி | — | ஏகாதசி விரதம் |
| 12 | ஞாயிறு | — | பிரதோஷ விரதம் |
| 14 | செவ்வாய் | — | பூரணை விரதம் |
| 15 | புதன் | — | கார்த்திகை விரதம் |
| 23 | வியாழன் | — | ஆறுமுகநாவலர் குருபூசை |
| 27 | திங்கள் | — | பிரதோஷ விரதம் |
| 30 | வியாழன் | — | அமாவாசை விரதம் |

**★ சகிப்புத்தன்மை சமாதானத்தின் சாதனம் ★**

# மரம் நாட்டுதல்

மரம் நாட்டுதலை வனமகோற்சவமாக - மகா உற்சவமாக — பெருந்திருவிழாவாகக் கொண்டாட விரும்புபவர் தேவாரமும் புராணமும் பாடிக் கர்ப்பூரம் கொளுத்தித் தேங்காய் உடைத்து இந்த நற்கருமத்தைச் செய்யலாம். இது ஒரு புனிதமானபணி.

மரத்தின் அடிப்பாகம் பிரமபாகம் என்றும், நடுப்பாகம் விஷ்ணுபாகம் என்றும், மேற்பாகம் சிவன்பாகமென்றும் நூல்கள் கூறுகின்றன.

மரம் பட்டுப்போனபின்பும் அங்கே எஞ்சி நின்ற கந்து வழிபாட்டுக்குரியதாய் இருந்தது என்று பட்டினப்பாலை என்னும் சங்கநூலில் கடியலூர் உருத்திரங்கண்ணனார் அழகாகக் கூறுகிறார்.

மரங்களால் சிவத்தலங்கள் பெயர்பெற்றுள்ளன

| | |
|---|---|
| தில்லைமரத்தால் | தில்லைவனம் — சிதம்பரம் |
| ஆலமரத்தால் | திருவாலங்காடு |
| மருதமரத்தால் | திருவிடைமருதூர் |
| பனைமரத்தால் | திருப்பனந்தாள் |
| பாதிரிமரத்தால் | திருப்பாதிரிப்புலியூர் |
| பலாமரத்தால் | குறும்பலா — திருக்குற்றாலம் |
| கடப்பமரத்தால் | கடம்பூர் |
| மாமரத்தால் | காஞ்சி ஏகாம்பரம் |

திருச்சிற்றம்பலம்

காவினை யிட்டும் குளம்பல தொட்டும்
களிமனத்தால்
ஏவினை யாலெயில் மூவெயில் செற்றீரென்று
இருபொழுதும்
பூவினைக் கொய்து மலரடி போற்றுதும்
நாமடியோம்
தீவினை வந்தெமைத் தீண்டப் பெறுதிரு
நீலகண்டம்.

காவளர்த்தும் குளந்தொட்டும் கட்பாடு
வழுவாமல்
மேவினர்க்கு வேண்டுவன மகிழ்ந்தளித்தும்
விருந்தளித்தும்
நாவலர்க்கு வளம்பெருக நல்கியும்நா
னிலத்துள்ளோர்
யாவருக்கும் தவிராத ஈகைவினைத்
துறைகின்றார்.

திருச்சிற்றம்பலம்

## வலி வடக்கில் நல்ல கருத்தரங்கம்

யாழ் மாவட்ட சனசமூக நிலைய சமூக அபிவிருத்தி முன்மாதிரி செயல்திட்ட ஒன்றியத்தின் கருத்தரங்கம் ஊறணியில் 19-8-78 சனிக்கிழமை நல்லமுறையில் நடைபெற்றது.

# அமைதியில் இன்பம்

ஆத்ம ஞானிகள் பலர் அமைதியில் இன்பங்கண்டுள்ளார்கள். அமைதி இன்பகரமாகவும், குளிர்மையாகவும், குதூகலமாகவும், மனநிறைவாகவும் உள்ளது. பேச்சும் சந்தடியும் குமுறும் கடல்போல் உள்ளவை. அமைதி ஆழமான அசையா நீரைப்போன்றது. அமைதி சஞ்சலமுள்ள மனத்தை அதற்குரிய சாத்துவிக நிலைக்கு இட்டுச்செல்வது. அமைதியிலிருந்தே அகிலம் உருவானது. அமைதியே யாவற்றினும் ஆதியும் அந்தமுமாகும். ஆதிக்கும் அந்தத்துக்கும் இடையிலேயே சந்தடிகள், சத்தங்கள், கலகலப்புக்கள் அவசரங்கள் ஆரவாரங்கள் நிலவுகின்றன. ஆறுகள் ஊற்றெடுக்கும்போது அமைதியாய் இயங்குகின்றன. கடலில் கலக்கும் போதும் அமைதியாய் இருக்கின்றன. இடையிலேதான் அதிரவந்து ஆரவாரித்துக் கொள்கின்றன. பறவைகள் மாலையில் கூடுகளில் அமைதிகாண்கின்றன. நமக்கும் அமைதி தேவை.

ஆதாரம்: இறைவன் திருவடியில்
சுவாமி இராமதாஸ்

## அவரைக்காய்

அவரையிற் பல இனங்கள் உள்ளன. கொடிக்காய் கறிகளில் அவரைக்காய் மிகவும் சிறந்தது. அவரைப் பிஞ்சு மிகமிகச் சிறந்தது. அது உடம்புக்கு நன்மை செய்வதோடு, பத்தியத்துக்கும் பயன்படுவது. பிஞ்சுக்காய்களில் அதிகம் விதைகள் இருக்கமாட்டா. அவை இரவு நேரங்களில் உண்பதற்கு உகந்தவையாகும். அவரைக்காய் இலகுவாகச் சமிபாடாகக் கூடியது. வாத நோயாளருக்கு மிகவும் நல்லது. இன்னும் காய்ச்சல், புண்கள் முதலிய நோய்களுற்றபோதும் அவரைப்பிஞ்சு சிறந்த உணவாகும். இது இரத்தக் கொதிப்பை தடுக்கும் தன்மையுள்ளது.

கங்குலுண விற்கும் கறிக்கு முறைகளுக்கும்
பொங்குதிரி தோடத்தோர் புண்சுரத்தோர் தங்களுக்கும்
கண்முதிரைப் பில்லநோய்க் காரருக்கும் காமுறையா
வெண்முதிரைப் பிஞ்சாம் விதி.

பாடல்பெற்ற அவரைக்காய் பழமொழிகளிலும் சிறப்புப்பெற்றுள்ளது.

அவரை எப்போ போட்டாலும் தை மாதம் காய் என்றும்,
ஆடாது எல்லாம் ஆடி அவரைக்காயும் பறித்தாச்சு என்றும்
ஆடி அவரை தேடிப் போடு என்றும்
பழமொழிகள் வழங்குகின்றன.

அவரை இனங்கள்

போஞ்சிஅவரை, பயிற்றங்காய், காராமணி,, மொச்சை, பெரிய அவரை என்னும் பட்டர் பீன்ஸ், கொத்தவரை, பயறு, கொள்ளு. துவரை, சீமை அவரை, சோயா அவரை. ★

## மானிப்பாய் இளம் விவசாயிகள் கழகப் பயிற்சி வகுப்புகளின் ஆரம்பவைபவம்

இவ்வைபவத்தில் மில்க்வைற் தொழிலதிபர் பிரதம விருந்தினராய்க் கலந்து கொண்டார்.

★ பாபம் என்பது நாம் பண்ணிய பிசகே ★

## குப்பிழான் கண்ட பெருவிழா

குப்பிழான் என்றதும் காசிவாசி செந்திநாதையர் அவர்களின் நினைவு வருவது வழக்கம். ஆறுமுகநாவலரின் மாணவராய், அவர் பாடசாலையில் தலைமையாசிரியராய், அவர் சிவபூசை நேரத்தில் ஓதுவாராய் இருந்த மகான் செந்திநாதையர் தமிழிலும் வடமொழியிலும் பேரறிஞராய்ச் சைவத்தொண்டில் தலைசிறந்தவராய்த்திகழ்ந்தவர். தேவாரம் வேதசாரம், கந்தபுராண நவநீதம், சிவஞான போதவசனலங்காரதீபம் முதலிய நூல்கள் ஒவ்வொன்றுக்கும் அவருக்குக் கலாநிதிப்பட்டம் வழங்குவதாயின் அவர் பத்துக்கலாநிதிகளின் எடைக்குச் சமனுவர் என்று அநுமானிக்கலாம்.

குப்பிழான் விக்கினேஸ்வரா சனசமூக நிலையத்தின் முப்பதாவது ஆண்டுவிழா 30-9-78 சனிக்கிழமை நடைபெற்றபோது மில்க்வைற் தொழிலதிபர் ஆசியுரை வழங்கினர். திரு. கதிர் சுந்தரலிங்கம் அவர்களுக்குப் ''பக்திப் பண்ணரசு'' பட்டம் வழங்கிய வைபவத்தில் பொன்னடை போர்த்துக் கௌரவித்தார். பெரிய கலைவிழாவாக நடைபெற்ற வைபவத்தில் அவ்வூரவர் மில்க்வைற் தொழிலதிபரின் சமூக சேவையைப் பாராட்டி வாழ்த்துப்பா வழங்கினர்.

''பனைகளைக் காக்கும் வேந்தர்
பயிர்விதை வழங்கும் தொண்டர்
தனிவழி கிணறு வெட்டித்
தாகத்தைப் போக்குஞ் செம்மல்
வினைபல பெருக்கித் தக்க
வேலைவாய்ப் பளிக்கும் அன்பர்
அனைவரும் வாழ அள்ளி
வழங்கிடும் வள்ளல் வாழி

அரியநல் லறிஞர் வாழ்வ
தால்உல கெங்கும் ஏத்தும்
திருமலி யாழ்ப்பா ணத்துச்
சிறப்புறு பண்பைப் பேணும்
ஒருவரிங் குளரேல் அந்த
உத்தமர் கனக ராசா
திருமனச் செல்வர் என்றும்
சீர்சிறப் போங்க வாழி

செந்தமிழ் சிறக்க ஈதல்
சிந்தனை பிறக்க ஈதல்
நொந்தவர் தழைக்க ஈதல்
நோன்பெனக் கொண்டு வாழும்
விந்தைகொள் வள்ளல் எங்கள்
மில்க்வைற் கனக ராசா
சந்ததம் சிறந்து வாழச்
சால்புடன் வாழ்த்து வாமே.

நீரினைக் கொண்டு சென்று
நித்தமும் பாயும் கங்கை
பாரினைப் புரந்து செல்லும்
பான்மைய தொப்ப நின்றன்
சீரிய செல்வம் எங்கும்
சிறப்புற ஊறிப் பாய்ந்து
நேரிய பயனை நல்க
நிமிர்ந்தனர் தமிழர் வாழி

பொற்புறு கரங்கள் வாழி
புண்ணியப் பயன்கள் வாழி
விற்பனத் திறமை வாழி
வியன்தொழில் நிலையம் வாழி
கற்பக விருட்ச மென்னும்
கனகரா சர்தம் அன்புக்
கற்புறு மனைவி சேரக்
கவினுற வாழி! வாழி!!

## கண்டதும் கேட்டதும்

இறக்கும்வரை ஒருவரிடம் அமையவேண்டிய பண்புகள்: ஹாஸ்யம், மனிதத்தன்மை, விருந்துபசாரம்.

★ ★ ★

நண்பர்களை அந்தரங்கமாகத் தண்டித்துப் பகிரங்கமாகப் புகழுதல் வேண்டும்.

★ ★ ★

பென்னம்பெரிய திட்டங்களிற் பார்க்க, செய்து நிறைவேற்றிய சிறு வேலைகள் சிறந்தவை.

★ ★ ★

வறுமையை நண்பர் எனக்கருதி வரவேற்றல் வேண்டும். அது சத்துராதி அல்ல.

★ ★ ★

உனக்கு உதவாத உணவை நிலத்தில் எறியாதே. அதுதானும் இல்லாத ஏழைகள் பலருளர்.

★ ★ ★

நன்னடத்தை ஒரு மரத்தைப்போன்றது. புகழ் அதன் நிழலைப் போன்றது.

★ ★ ★

அயலவருக்குரிய கடமையை எல்லோரும் செய்தால் உதவியற்றவர் எவரும் இலர்.

★ ★ ★

மற்றவருக்கு நாம் கொடுக்கக்கூடிய சிறந்த பரிசு, நமது நன்னடத்தை முன்மாதிரியாகும்.


★ ★ ★

வீரனுக்கு வீரமூட்டப் பேரிகை அடிக்கத் தேவையில்லை.

★ ★ ★

தன் கடமையைச் சரிவரச் செய்பவன் என்றும் பெரியவனே.

★ உணவு சுத்தமானுல் உள்ளம் சுத்தமாகும் ★



# லிங்கோற்பவர்

சிவன்கோயில்களில் மேற்குப் பிரகாரத்தில் விமானத்தின் கோட்டத்தில் லிங்கோற்பவமூர்த்தம் இருக்கும். லிங்கோற்பவமூர்த்தம் அற்புதமான அருள்மூர்த்தம். தக்ஷிணாமூர்த்தம் முனிவர் நால்வருக்கு அறமுறைத்தற் பொருட்டு எழுந்தருளியபான்மையில், இலிங்கோற்பவம் திருமாலுக்கும் பிரமனுக்கும் மயக்கத்தையும் அகந்தையையும் நீக்கி உண்மையை அறிவிக்கும் பொருட்டு எழுந்தருளிய அருள்மூர்த்தமாகும்.

இலிங்கோற்பவத்தில் திருவுருவின் மேற்பாகமும் கீழ்ப்பாகமும் எவருக்கும் புலனுவதில்லை. அவைமுறையே பிரமனுக்கும் திருமாலுக்கும் அறியமுடியாத உயரமும் ஆழமும் உள்ளவையாகும். அவற்றின் அந்தத்தையும் ஆதியையும் கண்டறிவதற்காக, அடிமுடி தேடுவதற்காக அவர்கள் இருவரும் படாதபாடுபட்டுப் பன்றியாகவும், அன்னப்பறவையாகவும் உருவெடுத்துத் தேடித்திரிந்தனர். அவர்கள் தேடித்திரியும் பாவனை லிங்கோற்பவ வடிவில் அமைந்திருக்கும். அறியாமையும் அகந்தையும் இறைவனை அடையவிடா. அவற்றை விட்டவர்களுக்கே இறைவன் காட்சிகொடுத்தருளுகிறர்.

சிவபெருமான் பாதாளம் முதல் ஆகாச பரியந்தம் பரவிப் பிரகாசிக்கின்றர். இதை முட்டைபோன்ற வடிவினுள் அமைத்திருப்பர். ஆதியந்தம் இல்லாத அரும் பெருஞ் சோதி அவர்.

இலிங்கவழிபாடு உலகமெங்கும் ஒருகாலத்தில் பரவியிருந்தது. உலகமே லிங்கவடிவமானது. உலகத்தைப் போன்றுள்ள ஏனைய கிரகங்களும் லிங்கவடிவானவை. இலிங்கவழிபாடு முன்னர் எகிப்து, சிரியா, பாரசீகம், சின்ஞசியா, கிரேக்கம், இத்தாலி, ஆபிரிக்கா, அமெரிக்கா முதலிய நாடுகளில் பரவியிருந்தது. அமெரிக்க கண்டத்துக்கு ஸ்பானிய மக்கள் சென்ற காலத்தில் அதனைப் பரிசுத்தமாகக் கருதி வழிபட்டவரைக் கண்டனர் என்பர்.

[குறிப்பு: தென்னமெரிக்காவில் சைவசமயம் பரவியிருந்த வரலாறு பின்னர் வெளிவரும்.]

### இராதாகிருஷ்ணன் கண்ட
# இந்து தருமம்

ஒருவன் சட்டத்தை மீறினுல் தண்டிக்கப்படுகிறன். சட்டத்தை மீறலாம். ஆனுல் ஆன்மா இல்லை என்று சொல்லுவது, மீறுவது கடினம். நாம் செய்யும் புண்ணிய பாவங்களைப் பிறப்பினுல் அறியலாம். இறப்பினுல் அவை தீர்வனவல்ல அவை ஆன்மாவைத் தொடர்ந்து போவன. ஊட்டி நிற்பன.

இந்து தருமம் வாழ்க்கையின் வழி. அது எந்த மதத்சார்பையும் வற்புறுத்துவதில்லை. அது செயல்முறையில் மிகவும் கண்டிப்பானது. இதனைச்செய், இதனைச்செய்யாதே என்று கூறும் தருமம்; இன்ன செய்தால் இன்ன பயன் கிடைக்கும் என்றும் கூறுகிறது. பயனை நாம் அநுபவித்தே தீரவேண்டும்.

இந்து தருமத்தில் பாபிகள் தம்மைத் திருத்திக்கொள்ள இடமுண்டு. தாம் செய்த குற்றத்துக்குப் பச்சாத்தாபப்படுதல், பிராயச்சித்தஞ் செய்தல், மன்னிப்புக்கோருதல் முதலியவற்றல் ஓரளவுக்கு வேதனையைக் குறைத்துக் கொள்ளலாம். நல்லதைச் செய்தவன் நல்லகதிக்கே போவான்.

இந்து தர்மம் சத்தியத்துக்கு முக்கிய இடம் அளிக்கிறது. தருமம் என்றல் நேரியசெயல் என்பதும் கருத்தாகும். எதையும் தாங்கிச்செல்லுதல் என்றும் கருத்துண்டு. தர்மத்தின் மூலம் த்ரு. த்ரு என்றல் தாங்குதல் என்பது பொருள்.

### யாழ்ப்பாணம்
# இந்துக்கல்லூரிச் சாரணர்

இலங்கையின் மிகப்பழைய இந்துக்கல்லூரியாக நிலவும் யாழ் இந்துக் கல்லூரியின் சாரணக் குழுவினர் தங்கள் 62ஆம் ஆண்டு நிறைவு விழாவைக் கோலாகலமாக 10-10-78இல் கொண்டாடினர்கள். நிலக்காட்சிகள், திடற் காட்சிகள், பாசறைத்தீ முதலியவற்ருேடு நல்லதொரு விழாமலரையும் வெளியிட்டுள்ளார்கள். முன்னுள் குருளைச் சாரணக் குழுத்தலைவர் வெ. சுந்தரராசா அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து விழாவைச் சிறப்பித்தார்கள். இன்று குருளைச்சாரணத் தலைவராயிருப்பவர் திரு. மா. புவனேந்திரன் என்பவராவர்.

அன்றையதினம் மில்க்வைற் ஸ்தாபனத்தாரால் சாரணீயம் என்னும் நூல் வழங்கப்பட்டது.

## சைவமுன்னேற்றச் சங்க ஆண்டு நிறைவு


இங்கிலாந்தில் உள்ள சைவமுன்னேற்றச் சங்கத்தின் இலங்கைக் கிளையின் ஆண்டுநிறைவு விழா 18-8-78 இல் வெகுவிமரிசையாகக் கொழும்பில் கொம்பனித் தெருவில் நடைபெற்றது. அவர்களின் சைவப்பணி வெல்க.

### வட்டுக்கோட்டை
# சமூக பொருளாதார அபிவிருத்திக்கழகம்

இக்கழகத்தார் மில்க்வைற் தொழிலகத்தின் பன்முகப் பணிகளைப் பாரட்டித் தாமும் பணி செய்கிருர்கள். எங்கள் நன்றி.

★ கோபத்திலும் கொடிய பகைவன் எங்கும் இல்லை ★

முற்றொடர்:



# சூரியநமஸ்காரம்

## பழைய செய்திகள்

பாகவதத்தில் சூரியனைப்பற்றிய செய்திகள் உள்ளன. அவன் மழை, பனி, வெப்பம் ஆகியவற்றை உண்டாக்குகிறான். அவன் ஒற்றைச் சில்லுள்ள தேரில் உலா வருகின்றான். அச்சில்லில் பன்னிரண்டு ஆரக்கால்கள் உள்ளன. வேதத்தின் ஏழு சந்தங்களும் ஏழு குதிரைகளாய் அத்தேரை இழுக்கின்றன. அவன் தேரில் மிகச்சிறிய உருவினரான 60,000 முனிவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் சூரியனின் வெம்மை உலகில் விழுந்தால் உலகத்தவர் தாங்கிக்கொள்ளமாட்டார்கள் என்னும் பரிவினால் தாங்கள் அவ்வெப்பத்தைத் தாங்கி உலகத்தவருக்கு அளவான வெப்பத்தை விடுகின்றனர். இவர்கள் சூரியனுடன் உலவிக் காற்றையே உணவாகக் கொள்பவர். கருணையாளர். வாலகில்யர் என வழங்குபவர். இம் முனிபுங்கவரையே திருமுருகாற்றுப்படை விண்செலல் மரபின் ஐயர் எனக் கூறுகிறது. இம்முனிவர்களுக்கு முருகக் கடவுளின் பேரருள் நிரம்ப உண்டு. சுடரொடு திரிதரு முனிவர் எனச் சிலப்பதிகாரம் கூறுவதும் இவர்களையேயாம்.

இம்முனிவர்களைப்பற்றிப் புறநானூற்றில் தாமப்பல் கண்ணனார் விரிவாகப்பாடியுள்ளார். நிலத்தின்மேல் உயிர் வாழ்வார்க்கு வெம்மையான் உழதாகிய சுழற்சி நீங்கச் சுடுகின்ற கதிரையுடைய ஞாயிற்றினது வெப்பத்தைத் தாம்பொறுத்துக் காற்றை உணவாகக்கொண்டு அச்சுடருடனே சூழவரும் விளங்கிய சடையையுடைய அருந்தவர் என்பது அப்பாடல் குறிக்கும் பகுதியாகும்.

நிலமிசை வாழ்நர் அலமரல் தீரத்
தெறு கதிர்க் கனலி வெம்மை தாங்கிக்
கால் உணவாகச் சுடரொடு கொட்கும்
அவிர் சடை முனிவரும்............

## குப்தர்கள் வழிபட்டனர்

குப்தர் ஆட்சிக்காலத்தில் எழுதப்பட்ட சாசனங்கள் பெரும்பாலும் ''நமசூர்யாய'' என்னும் முன்மொழியை உடையவையாகும். அதனால் அவர்கள் காலத்திலும் அவர்களுக்கு முன்னரும் சூரியவழிபாடு பரதகண்டத்தில் நிலவி வந்ததென்பது துணிபாகும். அன்றி ஒரு கல்வெட்டில் பட்டுநெசவாளிகள் பலர் சேர்ந்து சூரியபகவானுக்கு ஓர் ஆலயம் அமைத்தார்கள் என்னும் செய்தி கிடைத்துள்ளது. இன்னொரு கல்வெட்டில் இந்திரபுரம் என்னும் ஓரிடத்தில் சூரியன் கோயில் இருந்ததாகவும் அதற்கு மன்னர்கள் மானியம் அளித்ததாகவும் அறியக்கிடக்கிறது. சில மன்னர் தமக்குப் பரமாதித்திய பக்தர் என்னும் பட்டப் பெயர் சூட்டிக்கொண்டதாகவும் அறியக்கிடக்கிறது,

பரதகண்டத்து மன்னர் பலர் தம்மைச் சூரியகுலவம்சத்தவர் எனக் கூறிக்கொண்டனர். ஸ்ரீராமரின் குலத்தை விளக்கப் புகுந்த விசுவாமித்திரர் ''ஆதித்தன் குல முதல்வன் மனுவினையார் அறியாதார்'' என்று கூறுகிறார்.

— தொடரும்

முற்றொடர்:

# தொகைவிளக்கம்

## மூன்று

**ஊழ்வகை**

பிராரத்துவம், சஞ்சிதம், ஆகாமியம்

**ஏறு**

அதிகாரநந்தி, திருமால்நந்தி, கருமநந்தி

**ஒற்றெழுத்துவகை**

வல்லினம், மெல்லினம், இடையினம்

**கடன்**

தேவர்கடன், பிதிரர்கடன், முனிவர்கடன்

**கடுகம்**

சுக்கு, திப்பிலி, மிளகு

**கணம்**

தேவர்கணம், மனிதர்கணம், இராட்சதகணம்

**கரணம்**

மனம், வாக்கு, காயம்

**கலை**

தந்திரகலை, மந்திரகலை, உபதேசகலை

**கனி**

கதலி, மா, பலா

**காரணம்**

முதற்காரணம், துணைக்காரணம், நிமித்தகாரணம்

## பல்லாயிரம் ஏடுகள்

என்றுமிராத வகையில் இம்முறை எங்கள் அரிவரி ஏடுகள் ஆயிரம் ஆயிரமாக நாடெங்கும் விநியோகமாயின. எங்கும் வித்தியாரம்ப விழாக்கள் வைதிக முறையில் நடைபெற்றதை அறிந்து பெருமைப்படுகிறோம். நன்றி.

☆ நலம் கருதாச் செய்கை நல்லவரின் இயல்பு ☆



# ஸ்கந்தசஷ்டி விரதம்

முருகக்கடவுளுக்குரிய விரதங்களுள் அவர் பெயரால் வழங்குகின்ற கந்தசஷ்டி விரதமும் ஒன்றாகும். வைதிக சமயநெறி வழுவாது வாழ்ந்து வருகின்றவர்களுக்கு ஆன்றோரால் விதிக்கப்பட்ட விரதங்கள், விழாக்கள், பண்டிகைகள் யாவும் அர்த்தமுள்ளவையாகும். வரலாற்றுக்கு எட்டாத காலந்தொடக்கம் அறநெறி வழுவாது வாழ்ந்து வரும் மக்கட்கூட்டத்தோடு, அகவாழ்விலும் புறவாழ்விலும் பின்னிப் பிணைந்து வருவது கடவுள் நெறியாகும். கடவுள் நெறியில் கடவுள் தொடர்பான விரதங்களும் விழாக்களும் வாழ்வியலோடு ஒன்றியுள்ளன.

வையகத்தில் வாழ்வாங்கு வாழத்தெரிந்தவர்களான எம்முன்னோர், தங்கள் வாழ்வை வளம்படுத்திய வண்ணங்கள் வைபவங்களை எமக்கும் பயன்படும்வகையில் விளக்கியுள்ளார்கள். நாம் அவற்றை எங்கள் நல்வாழ்வுக்காக ஏற்று அநுட்டித்துப் பார்ப்பது எங்கள் கடன்.

விரதங்கள் விழாக்களாகிய வைபவங்கள் யாவும் பக்தியடிப்படையிலேயே விதிக்கப்பட்டுள்ளன. இறைவழிபாடு இல்லாத பண்டிகைகளே எங்கள் பாரம்பரியத்தில் பண்பாட்டில் இல்லை. விரதங்களாலும் விழாக்களாலும் பண்பாடு சிறந்தமையால் அவற்றைப் பண்டிகை என்றனர் போலும்.

விரதங்களால் உடம்பில் உற்சாகமும் உள்ளத்தில் நிறைவும் அமைதியும் உண்டாகின்றன. உடம்பின் உறுப்புக்கள் யாவும் உறுதிபெற்று உழைக்கின்றன. நாம் பயிர் செய்யும் நிலத்தைப் பண்படுத்துவதற்குச் செய்யுங் கருமங்களைப்போல நமது உடம்பையும் உள்ளத்தையும் பண்படுத்துவதற்குச் செய்யும் கிரியைகளுள் விரதங்களும் இடம்பெறுகின்றன.

## கந்தசஷ்டி விரதம் ஆறுநாள்

தீபாவலி அமாவாசையை அடுத்துவரும் பிரதமை நாள் முதல், சஷ்டி என்னும் ஆறும் நாள்வரை ஆறுமுகப் பெருமானை அன்போடு நினைந்துருகிச் செய்யும் வழிபாடும் விரதமும் பெரும் பயனைத்தரும்.

ஆறுநாள் சென்று அகப்பட்ட கொக்கைச் சாறாக வைத்தனர். அதை வேதப் பிராமணர் தாமும் உண்டார், சைவர் தாமும் உண்டார் என்பது குறவஞ்சிப் பாடல். மாமரவுருக்கொண்டு மறைந்த சூரனை மாய்த்த வேலனை வணங்கும் விழாவைச் சாறு என்றனர். அது எல்லோருக்கும் உரியவிழா.

உலகில் வைதிகசமயங்கள் ஆறு. அந்த ஆறும் மாறில்லாதவை. வீறுடையவை. இவற்றை நினைவிற்கொண்டு பின்வருந் தொடர்களைக் கருதுவோம்.

"ஆறுசமயக் கடவுள்வேறு வேறின்றி யான்
ஒருவனே அங்கங் கிருந்து
அன்பர்க்கு முத்திதரு வித்தென்று யாவர்க்கும்
அறிவித்த வதன மணியே"

"ஆறுதிசையுஞ் சமயங்களாறு மவுணர்களைக்
கீறும் வைவேற் பெருமான் முகமாறுங் கிளத்தும்"

"ஆறுசமய முந்தன்முக மாமென்றறியு மன்பர்
வீறு சிந்தைக்கிடை வீற்றிருக்குங் குகன்"

"ஐந்து முகத்தோடு அதோ முகமுந் தந்து
திருமுகங்கள் ஆறுகி"

"ஏவர்தம் பாலுமின்றி எல்லைதீர் அமலர்க்குள்ள
மூவிரு குணனுஞ் சேய்க்கு முகங்களாய் வந்த
தென்ன"

## ஆறுமுகக் கடவுள் அவுணரை அழிக்க வீறுகொண்டு எழுந்தருளுதல்

"நிலவுமிழும் புன்முறுவல் பூத்தலர்ந்த பூங்குமுதச் செவ்வாய், இருண் மலத்துண் மோகமுறும் பல்லுயிர்க்கு முத்தியளித்தற்கு மலபாகமுறவே கடைக்கண் பாலித்து, விண்ட பருவ மலர் பூத்தாங்கு, அருள்பொழியும் கண்மலரீராறும், பாரப்புயனசலம் பன்னிரண்டு, பறியாக்கருணைத் திருவுருவாய் அறன் எலாமோர் உருக்கொண்டோய்."

## முருகன் திருக்கைவேல்

முருகப்பெருமான் திருக்கைவேல் அடியவரை அணுகும் போது அறக்கருணைவடிவும், பகைவரை அணுகும்போது மறக்கருணை வடிவும்கொண்டு மாயையை அகற்றுவது. "அது ஆயிரங்கோடி சூரியர்களைப்போலப் பிரகாசித்து, அக்கினிச் சுவாலைகளைக் கான்று செல்ல, சூரபன்மன் கொண்ட பெரிய இருள்வடிவ முற்றும் உடனே நீங்கியது. அவன் தன்னுடைய மாயம் அழிந்ததையும், வேற்படை எதிரே வருவதையும் நோக்கி, ஒரு பெரிய மாமர வடிவாய் நின்றான்.

அவ்வேற்படை பூமியும், ஏழ்கடல்களும், பெரும்புறக்கடலும், வானுலகமும், மலைகளும் எண்டிசைகளும் ஆகிய எவ்விடங்களிலும் அக்கினிச் சுவாலைகளின் கற்றைகளை ஒருங்கே கக்கியது. சூரபன்மனுகிய மாமரத்தைச் சங்கரித்தது. சூரபன்மன் பழைய வடிவைக்கொண்டு உடைவாளினை உறையினின்றும் கழற்றி எதிர்த்துச் சீறினன். வேற்படை அவனுடைய மார்பைப்பிளந்து உடம்பை இரு கூறுக்கிச் சமுத்திரத்தில் விழ்த்தி, அநுக்கிரகவடிவங்கொண்டு தேவ கங்கையில் மூழ்கி தேவர்களுடைய துன்பத்தை நீக்கியருளி முருகக்கடவுளின் திருக்கரத்தில் வந்து வீற்றிருந்தது.

## சூரபன்மன் பெற்ற பேறு


சிவபெருமான் கொடுத்தருளிய வரத்தினால் அழியாத சூரபன்மன் மீண்டுமெழுந்தான். பிளவுபட்ட இரண்டு கூறும் கோழியும் மயிலுமாகி மாணிக்கமலையும் மரகத மலையும்போல முருகன் எதிரில் வந்தான். முருகக் கடவுள் அவன்மீது திருவருண்னோக்கஞ் செய்தார். கோழி கொடியாய்த் தேரின் மீதிருந்து கூவிற்று. மயில் முருகக் கடவுளுக்கு ஊர்தியாயிற்று.

சேவலும் மயிலும் போற்றி
திருக்கைவேல் போற்றி போற்றி.

★ நல்வாழ்வின் ஆரம்பம் உண்மை பேசுதல் ★

முற்றொடர்:

# சிவலிங்கம்



திருவாரூர், தென்நாகை, திருநள்ளாறு, திருமறைக் காடு, திருக்காறைவாசல், திருவாமூர், திருக்கோளிலி என்னும் ஏழு திருத்தலங்களும் சப்தவிடங்கஸ்தலங்கள் எனப் பெயர் பெறுவன. இங்கெல்லாம் சுயம்புலிங்கங்கள் உள்ளன. சுயம்புலிங்கம் என்றால் மனிதர் கைபடாமல் தானே உருவானது என்று பொருள்.

சிவலிங்கம் பஞ்சாக்கரரூபமாகவும், பஞ்சகலாதிருப மாகவும், பஞ்சபூதமயமாயும், பஞ்சகாரணேஸ்வரரூப மாகவும் உள்ளது என்பதை ஞானிகள் உய்த்தறிந்து கூறியுள்ளனர்.

பஞ்சாக்கரரூபமென்னும்போது கீழ்ப்பீடம், நடுக் கண்டம், மேற்பீடம், நாதக்குழி, இலிங்கம் என்னும் பாகங்களை முறையே நமசிவய என்னும் ஐந்தெழுத்தின் அமைப்பாகக் காண்பர்.

பஞ்சகலாதிருபம் என்னும்போது இவற்றை முறையே நிவர்த்திகலை, பிரதிட்டாகலை, வித்தியாகலை, சாந்திகலை, சாந்தியதீதகலை எனக் காண்பர்.

பஞ்சபூதங்கள் என்னும்போது இவற்றை முறையே பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்பர்.

பஞ்சகாரணேஸ்வரர்கள் என்னும்போது ஸ்ரீசதாசிவர், மகேஸ்வரர், உருத்திரர், விஷ்னு, பிரமா என்பவராவர்.

சிவபெருமான் பூதங்கள்தோறும் நிற்பவர், பூதங்க ளுக்கு அப்பாலும் நிற்பவர். ஐம்பூதங்கள்மயமாக அவர் எழுந்தருளியுள்ள ஐவகை லிங்கங்களும் பஞ்சபூதத்தலங் களில் ஆங்காங்கே உள்ளன என்பதை அறிந்துகொள்ள லாம்.

பிருதிவி என்னும் மண்மயமான லிங்கம் காஞ்சியில் உள்ளது. அப்புஸ்தலம் என்னும் நீர்மயமான செழுநீர்த் திரள் திருவானைக்காவில் உள்ளது. தீவண்ணர் என்னும் ஒளிமயமான இறைவன் திருவண்ணாமலையில் சோதி சொரூபராயுள்ளார். வாயுஸ்தலம் என்னும் திருக்காளத் தியில் காற்றுமயமாக உள்ளார். ஆகாயமயமான சிதம் பரத்தில் சுத்தவெளியாய் உள்ளார். இவற்றின் நுட்பங் களை எழுத்தில் எழுதிக்கொள்வது கடினமாகலின் சென்று கண்டு உணர்ந்து கொள்வதே சிறந்ததாகும்.

சிவலிங்கம் என்றால் சிவம் என்பதே பொருள். சிவமாகிய பொருளை நேரிற் காட்டமுடியாத சந்தர்ப் பத்தில் இத்தன்மைத்து என்று அறியவைப்பது சிவலிங்கம். சிவலிங்கம் எல்லாம் தோன்றி நின்று ஒடுங்குவதற்குரிய மூலம்.

சிவம் என்னும்போது சி என்பது சிவத்தையும், வ என்பது அருளையும் குறிக்கும். அருள் என்பதைச் சக்தி என்றும் கூறுவர். எனவே இது நாயகன் நாயகியைக் குறிக்கும் மங்கலப் பொருள்

எல்லாப்பொருளும் தானாயிருக்கும் தன்மை பரவெளி யாகிய சிவபெருமானுக்கு உண்டு. அப்பரசிவம் சிவலிங்க மாகிய திருமேனியைக் கொள்வது கருணைப்பெருக்கினால் என்பர். அங்ஙனம் சுயம்புலிங்கங்களானவை சிலதலங் களிலே உள்ளன. சுயம்புலிங்கம் எவராலும் செய்யப் படாதது ஆகும்.

பரசிவத்தைத் தெரிசித்தவர்கள் அமைத்த லிங்கங்களே தைவிதலிங்கம், ஆரிடலிங்கம், பூதலிங்கம் எனவுள்ளன.

சிவலிங்கவழிபாடு எல்லாமாகவுள்ள அட்டமூர்த்த வழிபாடாகும். அட்டமூர்த்தங்கள் என்பன எட்டு. அவற் றுள் பஞ்ச பூதங்களான நிலம், நீர், தீ, வாயு, ஆகாயம் ஐந்து; சூரியன், சந்திரன் என்பன இரண்டும் சேர ஏழு; எட்டாவதாக இயமானன் என்னும் ஆன்மாவும் சேர்வதால் அட்டமூர்த்தங்களாகின்றன.

பஞ்சபூதலிங்கங்கள் பிருதிவிலிங்கம், அப்புலிங்கம், தேயுலிங்கம், வாயுலிங்கம், ஆகாசலிங்கம் எனப் பெயர் பெறுவன.

(தொடர்ச்சி 9ஆம் பக்கம்)

## வழக்கிலுள்ள வடமொழிகள் சில

| | | |
|---|---|---|
| சமத்துவம் | — | ஒத்த உரிமை |
| சமபலம் | — | ஒத்த வலிமை |
| சமயாசாரம் | — | சமய ஒழுக்கம் |
| சமயோசிதம் | — | காலப்பொருத்தம் |
| சமரசம் | — | வேறுபாடின்மை |
| சமர்ப்பணம் | — | ஒப்பித்தல் |
| சமவாயம் | — | கூட்டம் |
| சமாஜம் | — | கழகம் |
| சமாசாரம் | — | செய்தி |
| சமாதானம் | — | இணக்கம் |
| சமாதி | — | அமைதி |
| சமானம் | — | இணை |
| சமாராதனை | — | உளநிறைவு |
| சமிக்ஞை | — | குறிகாட்டுதல் |
| சமிதி | — | கூட்டம் |

★ செருக்கைப்போன்ற தீமை உலகில் இல்லை ★

முற்ஞெடர்:

## தாவரவுணவும் தவவாழ்க்கையும்

### சர்வதேச தாவரவுணவுச்சங்கத்தார் கருத்து

பிரான்ஸ் தேசத்துப் பேராசிரியர் கலாநிதி யே. ரீ. மாருவற் என்பார் தம்முடைய ஆராய்ச்சியைக்கொண்டும், கூவியர், புரேக்கா என்னும் நிபுணர் இருவர் ஆராய்ச்சியைக் கொண்டும், "மனிதர் பழங்கள், தானியங்கள், மூலிகைகள் ஆகியவற்றை உண்டு வாழவேண்டியவர்கள்" என்று எழுதியுள்ளார். இன்னும் அவர் வேறு பலரின் ஆராய்ச்சிகள் முடிபுகளைக்கொண்டு, அமெரிக்கா, ஐரோப்பா ஆகிய கண்டங்களில் வாழ்பவர் பலர் மாமிச உணவின் காரணமாகவே பலவித நோய்களுக்கு ஆளாகின்றுர்கள் எனக் கூறியுள்ளார்.

பிரித்தானிய தாவரவுணவுச் சங்கத்துச் செயலாளராய யெவ்ரிடட் என்பார் தாவரவுணவின் மேன்மையைப் பற்றி எழுதும்போது, "என் நண்பர்கள் எதற்காக நரிகள், கழுகுகள் போலவும், புலிகள் போலவும் தாழ்ந்த நிலையில் இறங்கித் தம் வயிற்றை இறந்த பிராணிகளின் இடுகாடாக்கிக் கொள்கிறுர்கள் என்பது எனக்கு விளங்கவில்லை" என்று கூறியுள்ளார்.

மாமிசம் உண்பவர்களால் வாய்விடாச் சாதிகளான உயிருலகத்துக்கே பெருங்கேடு விளைகிறது. இந்தியாவில் மாமிசம் உண்பவர்களைப்பற்றிக் குறிப்பிட்டபோது மகாத்மாகாந்தியடிகள், "ஆங்கிலேயர் தமக்குப் போதியளவு பாண் உண்பதற்காக இறைச்சிவகைகளைச் சேர்க்கிறுர்கள். ஆனல் இந்தியர்களோவென்றுல் தம் வயிற்றுள் அதிக இறைச்சியை உட்செலுத்துவதற்காகப் பாணைத் தின்கிறுர்கள்." என்று கூறியுள்ளார்.

— தொடரும்

## இங்கிலாந்தில் நவராத்திரி விழா

இங்கிலாந்து சைவமுன்னேற்றச் சங்கத்தின் ஆதரவில் எசெக்ஸ் பிரதேசத்தில் 7-10-1978 மாலை பூசையும் ஆராதனையும், கூட்டுவழிபாடு, சக்திவழிபாடு பற்றி திரு. வி. சி. அப்பாசாமி அவர்களின் பேச்சு என்பன இடம்பெற்றன. இச்சங்கத்தாரின் ஆண்டுவிழா 12-11-78இல் நடைபெறவுள்ளது. அதற்கு எங்கள் வாழ்த்து.

### மட்டக்களப்பு சுகாதாரசேவை அத்தியட்சக அலுவலக நலன்புரிச்சங்கம்

இவர்கள் மில்க்வைற் செய்தியைப் பாராட்டிப் பின்வரும் வினுக்களுக்கு விடை கோருகிறுர்கள். தெரிந்தவர்கள் எழுதும் விடை செய்தியில் பிரசுரமாகும்:

1. இஞ்சியிலிருந்து வேர்க்கொம்பு (சுக்கு) எப்படித் தயாரிக்கலாம்?
2. பச்சை மஞ்சளிலிருந்து கறிக்குப் பயன்படும் காய்ந்த மஞ்சள் தயாரிப்பது எங்ஙனம்?
3. கஸ்தூரி மஞ்சள் என்பது என்ன? அதன் பிரயோசனம் என்ன?

## அடுக்குமொழி

கொட்டு முழக்கு
கொடுக்கல் வாங்கல்
கொண்டுங் கொடுத்தும்
கொத்தடிமை குடியடிமை
கொத்தோடே குலையோடே
கொலையும் களவும்
கொள்கை குறிக்கோள்
கோட்டை கொத்தளம்
கோணல் மாணல்
கோபம் தாபம்
கோயில் குளம்
கோள் குண்டுணி

### தெல்லிப்பழை அரிமாசங்கத்தாரின்

## உலக சேவைத் தினம்

ஏழாலை மகாவித்தியாலயத்தில் 8-10-78 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சிரமதானம், மரம் நாட்டுதல் முதலிய நிகழ்ச்சிகளில் மில்க்வைற் தொழிலகம் பெரும் பங்கு பற்றி உபகரிப்புக்கள் செய்தது.

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

### சிவலிங்கம்

எங்கள் யாழ்ப்பாணத்து வண்ணுர்பண்ணையில் உள்ள செட்டியார் சிவன் கோயிலில் இற்றைக்கு 188 ஆண்டுகளுக்குமுன்னர் கனகசபாபதியோகி என்னும் கூழங்கைத் தம்பிரான் சுவாமிகள் பாடியருளிய பாடல் இது.


[சாதாரண வருடம் சித்திரை மாதம் பூர்வபட்ச சப்தமியும் புனர்பூசநாளும் பொருந்திய வேளையில் பிரதிட்டையின்போது பாடியது.]

நதியரவ மதியிதழி புரிசடை யவிழ்ந்து நட
நண்ணுமா காச லிங்கம்
நால்வருக் குக்கலா னிழலினல் லுபதேசம்
நவிலுற்ற மவுன லிங்கம்
நிதிபதித னன்புடைத் தோழனு யீசான
நிலைநின்ற வேட லிங்கம்
நிவாதமுறை யிருவர்க் கழற்கம்ப வடிவாகி
நின்றெழுஞ் சோதி லிங்கம்

துதிதுதிக் கையானை யன்பொடும் போற்றிடுஞ்
சுயம்பான வப்பு லிங்கம்
துய்யவுணர் வோரிதய கமலாலயத்திலெழு
சுடர்பொற் கொழுந்து லிங்கம்
மதிதவழு மதிலோடு கோபுரந் திகழ்வுறும்
வண்ணையெல் லையி னிறுத்தும்
மாதங்க புரிதையல் பாகமிசை மீதமரும்
வைத்தீச மாலிங் கமே:

— தொடரும்

**உண்மையும் ஊக்கமும் ஒருவனை உயர்த்தும் சாதனம்**



முற்றொடர்:

## சோல்பரி கண்ட யாழ்நகர்ச்சுவாமி

இந்துக்களின் வாழ்க்கையின் இறுதி நோக்கம் முத்தியின்பமேயாம். (இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும்பொருட்டேயாம்.) இச்சந்தர்ப்பத்தில் 'நீ உண்மையை உணருவாய் உண்மை உன்னை விடுதலையடையச்செய்யும் என்று சென் யோன் அருளிய சுவிஷேசமும் சிந்திக்கத்தக்கதாகும்.

வெளிப்படுத்திக்காட்டும் உலகம் மற்றொன்றின் சார்பானதும், உறுதியற்றதும், கணத்தில் மாறுகின்ற தன்மையுள்ளது என்றும் எது உண்மையானதும் நிலையானதுமாகவுள்ளதோ அதுவொன்றே பெறுமதியானது என்றும் அவன் அறிவான்.

பல தெய்வவழிபாடு, உருவவழிபாடு, மூடநம்பிக்கைகள் முதலியன சம்பந்தமாக இந்துசமயத்தில் குறை கூறுவாருமுளர். ஆனால் இவையாவும் முற்றாக ஆராய்ந்தறியாமல் பிறர் தப்பபிப்பிராயத்தாற் கூறும் உரைகளாகும். உண்மையில் இந்துசமயம் இயற்கை கடந்த கடவுட் கொள்கையில் ஒரு தெய்வ வழிபாட்டைக்கொண்டதாகும். ஏனெனில் உண்மையும் உள்ளார்ந்ததும் ஒன்றே ஒன்றேயாகும். ஆனால் அந்த ஒரே ஒன்று உருவெளிப்படுத்திக்காட்டும்போது பலவாகின்றது. அதனால் எண்ணிறந்த அம்சங்களும் எண்ணமுடியாத விதம்விதமான திருவுருவங்களும் கடவுளரும் தேவர்களும் இந்துசமயத்தில் உருவெடுத்துள்ளபோதிலும் அவையாவும் ஒன்றேயொன்றின் வெவ்வேறு வடிவங்களாகின்றனவாம்.

ஒவ்வொருவனும் தான்தான் தனக்கு விளங்கக்கூடியதும், தனக்கு முத்திக்குச் சாதகமாயுள்ளதுமான ஒன்றைத் தெரிந்து கொள்ளலாம். ஆனால் அவையாவும் சின்னங்களேயன்றி முடிந்த முடிபான உண்மையாகாதென்பதை அறிந்துகொள்ளுதல் வேண்டும். உண்மையானது உரைக்கப்பட்டன, வசனிக்கப்பட்டன என்பனவுக்கு அப்பால் எல்லை கடந்து அறிவுக்கு அப்பால் உள்ளதாகும். ஆகவேதான் இந்துசமயத் திருவுருவங்கள்யாவும் பல திருமுகங்கள், பல திருக்கரங்கள் கொண்டும், மிருகங்களின் முகங்கள் கொண்டும், இந்துசமயியல்லாதவனுக்கு உருமுரணாகவும், வெறுக்கத்தக்கனவாகவும் இருக்கலாம்.

ஆனால் அவை உண்மைப்பொருளின் அடையாளங்களானமையால் இவ்விதமாக இறைவனுக்கு மனிதப்பண்பு சார்த்தும் முறையோ, உணர்ச்சிப் பசப்பு முறையோ கொண்ட ஆபத்துக்களைப் பெரும்பாலும் தவிர்த்துக் கொள்ளலாகும். அன்றி மனித உருவில் காட்சிமூலம் உணரப்பட்ட வழுக்கள் மனப்போக்கானவையல்ல, அவையாவும் தீர்க்கமான முடிபான கருத்துக்களைக் கொண்டனவாகும். அதை வழிபடுபவர் அதன் உண்மையை அறிந்தும் இருக்கலாம். உண்மையில் இந்துசமயத் திருவுருவம் அதன் முறையான பாரம்பரிய அமைப்பில் பூரணமான இயல் கடந்த ஆய்வாக்கமாகும்.

இந்துசமயச் சார்பான வரலாற்றுப்பாதையில் தற்காலத்தொடர்பில், அதாவது கடந்த மூவாயிரம் அல்லது நாலாயிரம் ஆண்டுகளுக்குள் இருபெரும் ஆற்றுப் பெருக்குகளின் வளர்ச்சியை அறியலாம். ஒன்று ஆரியம் எனவும் இந்து ஆரியம் எனவும் வழங்கும் வடதேசத்தது. மற்றது திராவிடம் எனவழங்கும் தென்நாட்டது.

— தொடரும்

நெடுங்கேணி வில்வையடி

## விநாயகர் கோயில் கும்பாபிஷேகம்

சென்ற மாதம் வெகுசிறப்பாக நடைபெற்ற கும்பாபிஷேகத்தின்போது அடியார்களுக்கு மில்க்வைற் வெளியீடுகள் இலவசமாக வழங்கப்பெற்றதைத் திருப்பணிச்சபையார் வெகுவாகப் பாராட்டியுள்ளார்கள். அங்கேயுள்ள விநாயகப்பெருமான் அற்புதமாகத் தோன்றியருளினர் என்பர்.

## தர்மம்

பெரிய பெரிய சாத்திரங்களை முறையாகக் குருவிடம் கேட்டறிந்தபிறகு தர்மத்தைப்பற்றி அறிவதற்கு ஆசைப்பட்டவருக்கே தர்மம் போதிக்கப்பட்டது. தர்மம் என்றொரு பொருள் உளது என்று கந்தபுராணம் தருமத்தின் பெருமையைக் கூறுகிறது. அறம் செய விரும்பு என்பது ஔவையாரின் ஆத்திசூடி. தர்மத்தைப்பற்றி எத்தனையோ மகான்கள் எழுதியுள்ளார்கள். தர்மம் புருடார்த்தங்களின் முதற்படி. தர்மத்தை அறிந்து பொருள்தேடி, இன்பம் அநுபவித்து இவற்றைவிட்டு மோட்சமாகிய வீட்டினை அடைவதே நெறி. தர்மத்தை இலகுவாக விளங்கவைத்த ஔவையார் ஈதல் அறம் என்று இரண்டு சொற்களிற் கூறியுள்ளார்.

நல்லது கெட்டதை அறிந்து ஆராய்ந்து அவற்றைச் சீர்தூக்கிப் பார்த்துப் பிறருக்குப் பயன்படத்தக்கவகையில் செய்யும் கருமங்களே தர்மத்தின் மூலங்கள். தர்மஞ் செய்வதற்குச் சாத்திரங்கள் விதிகளைக் கூறுகின்றன. விதி தவறிச் தர்மஞ்செய்தல் ஆகாது. தத்தம் கடமையையும் விதிப்படியே செய்தல் வேண்டும். சைவசமயம் வாழ்க்கை நெறிகளையும், நீதியையும், தர்மத்தையும் நிலைக்களனாகக் கொண்டது. இந்துசமயம் என வழங்கும் தொடரையே இந்து தர்மம் எனவழங்குதல் வேண்டும் எனக் கூறுவாரும் உளர். இந்துதர்மத்தின் தாற்பரியங்களை உணர்ந்தவன் உலகத்தை அறிந்தவனாவன்.

இந்துதர்மத்தில் கர்மா முக்கியபங்கு பெறுகிறது. நாம் செய்யும் வினைகள் எமக்குப் புண்ணிய பாவங்களைத் தருகின்றன. நற்செயல்களைச் செய்பவனுக்குச் சமூகத்திலேயே நல்ல பெயர் உண்டாகிறது. கர்மாவே ஒருவனுக்கு விதியாயமைகிறது.

## கருத்தாழம் கண்ட ஆசிரிய அன்பர்



[சென்ற மாதச் செய்தியில் குடைச்சாமியாரின் மகாவாக்கியம் ஒன்றுக்கு கருத்தாழம் காண முடியவில்லை என்று மில்க்வைற் செய்தி வாசக வட்டத்தாரிடம்விட்டிருந்தோம்.

ஆசிரியப்பெரியார் ஒருவர் தமது பெயரையோ இடத்தையோ குறிப்பிடாது அடக்கமாக ஆழங்கண்டு அறிவித்துள்ளார். அன்றி, 'சரியெனில் ஏற்றுக் கொள்ளுக' என்று தமது அடக்கத்தை உறுதிப்படுத்தியுமுள்ளார்.]

மாவு என்பது மா+உ எனப்பிரிந்து மா என்பது பிரபை, அல்லது ஜோதி எனப் பொருள் தரும். உ என்பது மூலாதார வடிவம். அது பிரம உருத்திரர்.

புள்ளைமை என்பது புள்(ஐ)அமை எனப் பிரிந்து பறவையை ஒத்தது எனப் பொருள் தரும்.

### விடயம்

மாவு அறிந்து — ஜோதியின் மூலாதார வடிவைத் தெரிந்து (உலகின் சிருஷ்டியின் பிறப்பு இறப்பு தோற்றம் ஆகிய உண்மையைத் தெரிந்து.) எல்லாம் நின் செயல் என்று — மூப்பு, பிணி, சாக்காடு ஆகிய எல்லாம் உனது திருவுள்ளப்படியே நடந்தேறுமென்று அறிந்த, மாதவர்க்கு — தெரிந்துகொண்ட பெரிய முனிவனுக்கு, அளவிலா ஆனந்தம் அளித்தனை — எல்லையில்லாப் பேரின்பப் பெரு வாழ்வைக் கொடுத்தாய் (இரண்டறக் கலத்தல் என்பது பொருள்) களவும் — களவு, காமம், கொலை, குடி, கூத்தி எனக் கூறும் பஞ்சமாபாதகங்களையும்,

புள்ளைமை — பறவைகளைப்போல ஓரிடத்தும் நிலைகொள்ளாத யாக்கையைப் பெற்றுக்கொண்ட (யாக்கை இருக்கை இளமை நிலையாமை)

வஞ்சனேற்கு — உள்ளத்தைக் கரந்து வைக்கும் மக்களாய எங்களுக்கு

இவ்வண்ணம் அளித்தனை — இந்நிலையைத்தந்தாய்.

கருத்துத் தளரும் தன்மை — (உன் திருச்சித்தத்தை ஆராயப்புகின்) அது சிந்தனைக்கு அப்பாற்பட்டு தளர்வை (சோர்வை) உண்டாக்கு நிலையாகிறது.

தக்கோய் — தனக்குவமையில்லாத தன்மையுள்ளவனே எங்ஙனம் புகழ்வேன் — உன் திருநாமங்களையும் திருவிளையாடல்களையும் யாருக்குச் சொல்லி எங்ஙனம் புகழ்ந்து போற்றித் துதிப்பேன். ★

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

### மரம் நாட்டுதலும்........

மெல்லிசைச் சக்கரவர்த்தி, வில்லிசை மன்னன் ரமேஸ் அவர்கள் பனையோலைத் தொப்பி தரித்துக் குளக்கரைகள் தோறும் குரலெழுப்பிப் பனைப்பாட்டுகள் பாடும்போது குஞ்சுகுருமான்களெல்லாம் உற்சாகத்தோடு பனை நடுவதில் ஊக்கமெடுத்தார்கள்.

வழக்கம் போல இந்த ஆண்டும்,ஒரு லொறி நிறைந்த பனம் விதைகளை உபகரித்த வைத்திய கலாநிதி தர்மலிங்கம் அவர்களை வணங்கி வாழ்த்துகிறோம். மில்க்வைற் தொழிலதிபரைப் பனைப்பணியில் தூண்டிவரும் மெய்யன்பர்களில் அவரும் ஒருவர். வலி-கிழக்கு உதவி அரசாங்க அதிபர், நீர்வேலி இராசேந்திரக்குருக்கள். மீசாலை எம். ரி. சுப்பிரமணியம் இன்னும் எத்தனையோ பிரமுகர்கள் இப்பணியில் பக்கபலமாக நிற்கிறார்கள். கிளிநொச்சி, தர்மபுரம், தேவிபுரம், உருத்திரபுரம், யோகபுரம், எங்குமுள்ள பள்ளிப்பிள்ளைகள் ஆளுக்குப் பத்துப் பனம் விதைகள் வீட்டு வளவுகளில் நடுவதில் ஊக்கம் எடுக்கிறார்கள். அவர்கள் நாட்டும் பனம் விதைகள் அவர்களோடு வளர்ந்து அவர்களுக்கும் பிறர்க்கும் விரைவில் பயன்தரும் என்பதில் சந்தேகமில்லை.

சென்ற பலவாண்டுகளாக மில்க்வைற் தாபனம் நாட்டிய பனம் விதைகள் இன்று வடலிகளாய் விட்டன. சில வடலிகள் பயன் தருகின்றன.

எண்ணெய் ஊற்றுவதற்கு இலுப்பையும், வேம்பும் நாட்டில் பெருகுதல் வேண்டும் என்று கருதிய மில்க்வைற் தொழிலதிபர் வேம்பு நடுவதில் நல்ல ஒத்துழைப்பைக் கண்டு மனம் மகிழ்ந்து இந்தமுறை காடுகள் வீதியோரங்களில் இலுப்பை நாட்டுவதில் ஈடுபட்டுள்ளார். இம்முறை ஒரு சாக்கு நிறைந்த இலுப்பைக் கொட்டைகள் வரண்ட பிரதேசத்து வீதியோரங்களில் முளைகொள்ளப்போகின்றன. முன்னர் கி. பி. 985 — 1010 ஆண்டளவில் இராசராச சோழன் இலங்கையிலிருந்து இலுப்பைப்பால் எடுப்பித்துத் தஞ்சையில் பிரகதீஸ்வரர் ஆலய வேலைக்குப் பயன்படுத்தினான் என்பது வரலாறு.

இலுப்பையும் வேம்பும் எமக்கு எண்ணெய் வளத்துக்கு உதவுதல் வேண்டும். கோயில் வெளி வீதிகளில் போதியளவு இலுப்பைக்கன்றுகள் நடுவதிலும் தொழிலதிபர் முயற்சி வெற்றியளித்துள்ளது. இன்னும் இம்முறை மருதமரங்கள் நட்டுக் கோயில் தேவைக்கு வசதி செய்வதிலும் கவனஞ் செலுத்துவதை மாவிட்டபுரம் பெரிய குருக்கள் வெகுவாகப் பாராட்டியுள்ளார்.

இதற்கிடையில் தெல்லிப்பழை சித்தம் சபாரத்தினம் அவர்கள் இரண்டு முழம், ஒரு மீற்றர் என நீளமுள்ள முருங்கைக்காய் காய்க்கும் முருங்கை மரங்களை உண்டாக்கிப் பெரு வெற்றி பெற்றுள்ளார். இம் முருங்கையினத்தைப் பரப்புமாறு மில்க்வைற் தொழிலதிபரை வற்புறுத்தி வருகிறார். இந்த மழையோடு எங்கள் பிரதேசம் சோலையமாதல் வேண்டும்.

சோலையும் மலையும் மழைக்குக் காரணம்

★ அவநம்பிக்கை மனத்தெளிவை அழிக்கும் ★

## அருள் விருந்து

**ஆதாரம்: தர்மசக்கரம்**

1. நல்ல உள்ளம் இனிய முகமாக வடிவெடுக்கும்.
2. இணக்கங்களுள் சிறந்தது இறைவனோடு இணக்கம்.
3. அண்டத்தின் ஆற்றல் பிண்டத்திலும் உண்டு.
4. வாழ்வு தவத்துக்கே உரியதன்றிப் போகத்துக்கு அல்ல.
5. சத்தியம் என்பது சமயத்தின் சாரம்.
6. அகத்தில் மகிழ்ச்சியால் ஆயுள் வளருகிறது.
7. தெய்விகம் எனப்படுவது மனத்தூய்மையே.
8. மாண்புள்ள செயல்களே ஒருவனை மனிதனுக்குவன.
9. ஒருவனின் கொள்கையின்படியே வாழ்வு அமைகிறது.
10. நீ பிறருக்குக் கொடுத்ததை மறந்துவிடு.

### நாராயணோபநிஷதம்

யாரைக்காட்டிலும் மேலானதும், வேறானதும் ஏதும் இல்லையோ அவர் தனிப்பொருள். விருட்சம் போன்ற அவர் உறுதி பெற்றவர். வான் மகிமையில் அவர் நிலைத்து நிற்கிறார். அந்தப் பரம புருஷனால் இவையாவும் நிறைந்து இருக்கின்றன.



## Divine Nectar

*by*

*Swami Sivananda*

1. Action is a stepping stone to meditation.
2. Uncontrolled senses work mischief.
3. Wisdom eradicates fear.
4. Endurance is a condition of wisdom.
5. Purity leads to Wisdom.
6. The worldly-minded cannot attain wisdom.
7. A sage has equanimity in pleasure and pain.
8. Works are conductive to knowledge.
9. Ignorant people are swayed by nature.
10. Wisdom kills all doubts.
11. The action of a sage does not bind him.
12. The sage has no more births.

### சுவாமி சிவானந்தர் பழமொழிகள்

1. கடவுள் எழில் காணாத கண் குருட்டுக் கண்ணே.
2. துன்பம் நம் கண்ணைத் திறக்கும் துணையாம்.
3. துன்பம் உன் மௌன ஆசிரியனாய்த் துணைசெய்யும்.


## நீம் சுகாதார தூபம்

மழைக்காலத்தோடு நுளம்பும் இலையானும் அதிகமாகப் பெருகி உபத்திரவந் தருகின்றன. இவற்றைப் போக்குவதோடு வீடுகளுக்குப் புனிதத்தையும், கணகணப்பையும், லட்சுமி கடாட்சத்தையும் உண்டாக்கும்.




'மில்க்வைற்' நீம் சுகாதார தூபத்தை தணலில் இட்டுப் புகைத்துப் பாருங்கள்.

எவரும் வாங்கக் கூடியதாக

25 சதம் பெறுமதியான பைகளில் உண்டு.


## The Hindu Yuga

The first krita a Yuga had 1728000 years. The colour of the Deity was white. The Dharma was four legged. The people were contented, virtuous, free from sorrow and deseses.

The second Treta Yuga had 1296000 years. The colour of the Deity was red and the Dharma stood on three legs. People were malicious, quarrelsome and dutiful.

The third Dwapara had 864000 years, the Deity was yellow. The Dharma stood on two legs. Falsehood, malice and discontent incread very much. Devotion and kindness deminished very much.

The fourth Kali yuga in which we live will have 432000 years. The Deity is black and is standing on one leg. People are vecious, wecked, neglectful of duty. Sorrow and suffering are predominating everywhere.

யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் ''சிவநெறிப்புரவலர்'' க. கனகராசா ஜே. பி. அவர்கள்.
கௌரவ ஆசிரியர் திரு. க. சி. குலரத்தினம் 1-11-78.